# நன்றி செபம்

கனிவு நிறைந்த குழந்தை இயேசுவே! என்மேல் நீர் பொழிந்தருளிய எல்லா நன்மைகளுக்காகவும் முழந்தாளிட்டு உமக்கு மனம் நிறைந்த என் நன்றியைச் செலுத்துகிறேன். உமது இரக்கத்தை நான் என்றும் போற்றிப் புகழ்வேன். நீர் ஒருவரே என் இறைவன்; என் துணைவன்; என் புரவலன் என்று பறைசாற்றுவேன் என் நம்பிக்கை எல்லாம் இனி உம்கையிலேதான். உமது இரக்கத்தையும், வல்லமையையும் எங்கும் விளம்பரம் செய்வேன். உமது பேரன்பையும், பெரும் செயல்களையும் எல்லோரும் ஏற்றுப் போற்றுவார்களாக. குழந்தை இயேசுவின் பக்தி மக்கள் உள்ளங்களில் எல்லாம். அதிகமதிகமாகப் பரவுவதாக, உமது உதவியைப் பெற்று மகிழும் அனைவரும் உமது குழந்தைப் பருவத்திற்கு என்றும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்களாக, என்றென்றும் அவர்கள் உம்மைப் போற்றி மகிமைப் படுத்துவார்களாக.

# அர்ப்பணிக்கும் செபம்

இனிய குழந்தை இயேசுவே! உமது குழந்தைப் பருவத்தின் பேருண்மைகளை வியந்து, உம்மை ஆராதிக்கிறேன்; உம்மை அன்பு செய்கிறேன்; உம்மை மகிமைப் படுத்துகிறேன்; என்மீது கொண்ட அன்பால் எனக்காக நீர் ஒரு சிறு குழந்தையாக பிறந்தீர். எனவே உமக்கு நன்றி கூறுகிறேன். அந்த அன்புக்குப் பதில் அன்பாக என்னை முழுதும் உமக்குக் கையளித்துக் காணிக்கை ஆக்குகிறேன். இப்பொழுதும், என் வாழ் நாள் முழுவதும் உம் திருக்குழந்தைப் பருவத்தின் புண்ணியங்களை எனக்கு அளிக்குமாறு உம்மை இறைஞ்சிக் கேட்கிறேன். அன்புள்ள இயேசுவே! உமது தாழ்ச்சியையும், பிறன்பையயும், கீழ்ப்படிதலையும், எளிமையையும் எனக்குத் தந்தருளும், உம்மை அன்பு செய்யவும், உம்மை பின்பற்றி நடக்கவும்

வானகத்தில் உமது தெய்வீகத்தைக் கண்டுகளிக்கவும் உமது அருள் எனக்குத் துணைநிற்பதாக. ஆமென்

## துன்பத்திலே செபம்

இனிய இயேசுவே! மக்களிடையே வாழ்வதும், அவர்கள்மேல் உமது ஆசியை ஏராளமாகப் பொழிவதும் உமக்கு மிகப்பெரும் மகிழ்ச்சி. நம்பிக்கையோடு உம்மை நாடிவந்த பக்தர் அநேகர் வியப்புக்குரிய வரங்களை உம்மிடமிருந்து பெற்றுள்ளனர், அவர்கள் கோரிய மனறாட்டுகளையும் அடைந்துள்ளனர். உமது அற்புத திருவுருவத்திற்கு முன் முழந்தாளிட்டு, என் இதயத்தை திறந்து, அதன் விண்ணப்பங்களையும், கோரிக்கைகளையும், ஏக்கங்களையும், *(உன் தேவையை இங்கே குறிப்பிடுக)* உமக்குப் படைக்கிறேன். உமது விருப்பம் போல் எனக்கு ஆகட்டும். உமது ஞானத்திற்கும், அன்பிற்கும் ஏற்ப, என் நன்மைக்காகவே எல்லாவற்றையும் நீர் செய்வீர் என நான் அறிவேன். இத்துன்ப வேளையிலே எனக்கு ஆறுதலாக வந்து மகிழ்ச்சியையும் தந்து கிருபையளிக்க வேண்டும் என்று குழந்தை இயேசுவே, உம்மை இறைஞ்சுகிறேன்.

## நோயிலே செபம்

இரக்கமுள்ள குழந்தை இயேசுவே! நோயாளிகளுக்கு நீர் காட்டிய கருணை எனக்குத் தெரியும், இவ்வுலகிலே நீர் வாழ்ந்தபோது, நோயாளிகளையும், அங்கம் குறைந்தவர்களையும் தீராத நோயால் துன்புற்றோரையும், உமது கனிவான கரத்தால் தொட்டு குணமாக்கினீர். இன்று இந்த விவேக் நகரிலுள்ள உமது திரு உருவத்தை நாடிவரும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கொடூரமான, படுமோசமான நோய்களிலிருந்து உம்மால் தான் அற்புதமாகக் குணமடைந்துள்ளதாகக் கூறுகின்றனர். குழந்தை இயேசுவே! நான் ஒரு

பாவி; துன்பங்களை அனுபவிக்க வேண்டியவன்; உமது கருணையைப் பெற உரிமையே இல்லாதவன் என்று எனக்குத் தெரியும். இருப்பினும் எண்ணற்ற வரங்களையும், நோய்களை நீக்கும் அற்புத குணங்களையும், மாபெரும் பாவிகளுக்குக் கூட நீர் மனம் இரங்கி அளித்து வருகின்றீர். ஆகையால் என்னையும் நீர் குணமாக்க முடியும் என்று இன்னும் அதிகமாக நான் நம்புகிறேன். வானக மருத்துவரே! இந்த நோயினின்று *(நோயை குறிப்பிடுக)* நான் குணமடைய வேண்டும் என்பது உமது திருவுளமாயின் உமது திருக்கரத்தால் என்னை ஆசீர்வதியும், எல்லா நோயையும், வலியையும் நீக்கி குணமாக்கியருளும். அக்குணத்திற்குக் காரணம் மருந்தல்ல, எல்லாம் வல்ல உமது தெய்வீக ஆற்றல் ஒன்றே என்பது எல்லோருக்கும் புலனாக வேண்டும்.

ஆயினும், ஆய்ந்தறியமுடியா உமது ஞானத்திற்கேற்ப் உமது சித்தம் வேறாக இருப்பின், அப்படியே ஆகட்டும். ஆன்ம நலனையாகிலும் அடியேனுக்கு அளித்தருளும். இந்நோயால் நான் துன்புறுகையில், உமது ஆறுதலின் இனிய அமுதம் என்மேல் வழிந்தோட்டடும், இவ்வுலகத் துன்பமெல்லாம் கொஞ்ச நாளுக்குத்தான் என்ற உயரிய உண்மை என் உள்ளத்தை நீரப்பட்டும்.

அன்பும் இரக்கமும் உள்ள குழந்தை இயேசுவே! துன்பங்களைத் திடமனதுடன் சகித்துக் கொள்ளவும், உமது திருவுளத்திற்குப் பணிந்து நடக்கவும் எனக்கு வரம் தாரும். என் துன்பங்களிலே உம்மைப் போலவே நானும் இருக்க, ஓ! இயேசுவே, என்னை ஆசீர்வதியும் நோயால் படுக்கையாகிவிட்டாலும், நித்திய வாழ்வை நீர் எனக்கு வழங்கும்வரை, உமது பேரன்பை நான் போற்றிப் புகழ அருள்தாரும். ஆமென்.

# நினைவு கூர்ந்தருளும் இயேசுவே!

தூய குழந்தை இயேசுவே! 'இத்திரு இதயத்திலிருந்து பெற்றுக்கொள்..... என் குழந்தைப் பருவத்தின் பலனாக நீ விரும்புவதை எல்லாம் கேள். கேட்டது எதுவுமே உனக்கு மறுக்கப்படாது" என்று திவ்விய நற்கருணையின் தூய மார்கரெட் அம்மாளுக்கு நீர் திருவாய் மலர்ந்த இச்சொற்களை நினைவு கூர்ந்தருளும். பாரச்சுமையால் நொறுக்கப் பட்டு நொந்து வருந்தும் ஏழை மக்களுக்கு எவ்வளவு ஆறுதல் நிறைந்த சொற்கள் இவை! உண்மையே உருவான உம்மில் முழு நம்பிக்கை கொண்டு எங்கள் துயரையெல்லாம் உமக்குத் தெரிவிக்கிறோம். தூயவர்களாக நாங்கள் வாழ்ந்து முடிவில்லாப் பேரின்பத்தை அடைய துணைபயாரியும். உமது மனிதபிறப்பின், குழந்தைப் பருவத்தின் அளவற்ற ஆற்றல் வழியாக எங்களுக்கு மிகமிக அவசியமான வரங்களை அளித்தருளும்.

எங்கள் நம்பிக்கை வீண்போகாது; போகவே போகாது: நாங்கள் ஏமாறவும் மாட்டோம். எங்களை உமக்குக் கையளிக்கிறோம். எல்லாம் வல்ல இறைவா! நீர் கொடுத்த வாக்குறுதியின் பலனாக எங்கள் மன்றாட்டைக் கனிவாகக் கேட்டு தயவாகத் தந்தருளும்.